## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!


சின்னவேடம்பட்டி பகுதி,
கோவை வடக்கு மாவட்டம்.


சுல்தான்பேட்டை கிழக்குப் பகுதி,
கோவை தெற்கு மாவட்டம்.


நந்தா நகர் பகுதி,
கோவை மாநகர் மாவட்டம்.


நங்கவள்ளி பேரூர்,
சேலம் மேற்கு மாவட்டம்.


நம்பியூர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.


நாமக்கல் ஒன்றியம்,
நாமக்கல் கிழக்கு மாவட்டம்.


கண்ணங்குடி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.


குருவிகுளம் வடக்கு ஒன்றியம்,
தென்காசி வடக்கு மாவட்டம்.


சேத்துப்பட்டு பேரூர்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.


ஜவ்வாதுமலை வடக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.


குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.


குடியாத்தம் தெற்கு ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்.

### மனுக்கள் – புகார்களை ஏற்றுக் கொள்வதில்

# நீதிமன்றம்போல தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது!

## முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தகவல்!

சென்னை, ஆக. 12 – மனுக்கள் – புகார்களை ஏற்றுக்கொள்வதில் நீதிமன்றம் போல தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

இந்திய தேர்தல் ஆணையம் நீதிமன்றம் கிடையாது என்றும், மனுக்கள் மற்றும் புகார்களை ஏற்றுக்கொள்வதில் நீதிமன்றத்தைப் போல் தேர்தல் ஆணையம் செயல்பட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையம் என்பது நியாயமான மற்றும் சுதந்திரமான முறையில் தேர்தல்களை நடத்தும் நிர்வாக அமைப்பு என்றும் ப.சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கக் கோரும் மனுக்கள் தொடர்பாக முடிவெடுப்பதில் மட்டுமே, விதி எண் 20இல், 3வது 'பி' பிரிவை தேர்தல் ஆணையம் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சட்டமன்றத் தொகுதி முழுவதும் நடைபெற்ற மிகப்பெரிய முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டு மீது முடிவெடுப்பதில் இந்த விதியை



தேர்தல் ஆணையம் பயன்படுத்த முடியாது என்றும் ப.சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

பீகாரில் வாக்குச்சாவடி முகவர்களின் புகார்கள் ஏற்கப்படுவதில்லை என, 'தி இந்து' ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தமும், புகார்களைப் புறக்கணிப்பதும் ஜனநாயகத் தேர்தல்களின் மரணத்திற்கு வழிவகுக்கும் என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்திய தேர்தல் ஆணையம் கடமைப்பட்டுள்ளது என்றும் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.


இராணிப்பேட்டை மாவட்ட திமுக அலுவலகத்தில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான ஆர்.காந்தி ஆலோசனையின்படிஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணன் தலைமை தாங்கினர். சிறப்பு அழைப்பாளராக மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் முனைவர்.பிரதீப் கலந்து கொண்டார். இதில் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் காந்தி, ராஜா பொன்னையன், திலீபன்,பாலச்சந்தர், கார்த்திக், கலாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் காணொளி காட்சி வாயிலாக, போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி வேலூர் ஊரிஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன், மாவட்ட திட்ட அலுவலர் மாலதி குடியாத்த சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் மற்றும் மாணவ – மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.